1973 நவம்பர் 24]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அவர்களுடைய குடும்பத்தினுடைய படங்களை முன்னாலே வைத்தால், அதனாலே சில சமயங்களில் பாசமும் ஏற்படும், பயமும் ஏற்படும். இரண்டுமே விபத்துக்களுக்குக் காரணமாக அமைகின்றன.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, தனியார் கார்களிலேயும் ஓட்டுகிறார்கள். அப்பொழுது யாருடைய குடும்பத்தினுடைய படத்தை வைப்பது? காரின் சொந்தக்காரருடைய படத்தையா அல்லது ஓட்டுநருடைய படத்தையா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இது மிகவும் சிக்கலான கேள்வி.

Cheran Bus Transport Corporation

*111. *Q.*—Thiru G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether an All- Party delegation met the Collector of Coimbatore district and submitted to him a representation regarding Cheran Bus Transport Corporation on 24th December 1972;

(*b*) if so, the subject-matter of the representation submitted; and

(*c*) the action taken thereon by the Government?

சேரன் பேருந்து போக்குவரத்துக் கழகம்

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சர்வ கட்சியைச் சேர்ந்தவர்கள் சேரன் பேருந்து போக்குவரத்துக் கழகம் சம்பந்தமாக 24—12—1972 அன்று கோவை மாவட்ட ஆட்சித் தலைவரைச் சந்தித்து மனு ஒன்றைச் சமர்ப்பித்துள்ளனரா?

(இ) ஆமெனில், எது குறித்து அம்மனு சமர்ப்பிக்கப்பட்டது?

(உ) அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) இந்த மனு தாராபுரத்தில் 18—12—1972 அன்று சேரன் போக்கு வரத்துக் கழகத்தின் பணியாளர்களுக்கும் "தாராபுரம் பஸ் சர்வீஸ்" நிறுவனத்தைச் சேர்ந்த பணியாளர்களுக்கும் இடையே நடைபெற்ற மோதல் பற்றிய தாகும்.

(உ) புலனாய்வு நடத்திய பின்னர், தாராபுரம் காவல் நிலையத்தில் 292/72 ஆம் குற்ற எண்ணில் இ.பி.கோ. 147, 148, 448, 427, 336, 324, 326 ஆம் பிரிவுகளின் கீழ் 14 பேர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. அக்காவல் நிலையத்தில் 314/72 முதல் 316/72 வரையிலான சிறு வழக்கு எண்களில் தாராபுரம் பஸ் சர்வீஸைச் சேர்ந்த சுத்தம் செய்பவர் (cleaner) ஒருவர், சேரன் போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த ஓட்டுநர் ஒருவர், பயணித் துணை ஒருவர் ஆகியோர் மீதும் இ.பி.கோ. 160-வது பிரிவின் கீழ் வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. இருந்தபோதிலும் இவ்விரு வழக்குகளிலும் குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் குற்றமற்றவர்களென விடுதலை செய்யப்பட்டனர்.

Blue Lights in the Motor Vehicles

* 112. *Q.*—THIRU K. S. GANAPATHY and THIRU R. SAMBASIVAM : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether the use of Blue Lights by the Motor Vehicles is an offence under the rules framed under Motor Vehicles Act, 1939; and

(*b*) if so, the number of cases in which charge sheets have been filed by the Police in this regard in Madras City during June and July 1973?

மோட்டார் வாகனங்களில் நீல விளக்குகள்

திரு. கே. எஸ். கணபதி & திரு. ஆர் சாம்பசிவம் : மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேம்—

(அ) மோட்டார் வெஹிக்கிள்ஸ் சட்டம் 1939-ன் கீழ் ஏற்படுத்தப்பட்ட விதிகளின்படி மோட்டார் வண்டிகள் நீல விளக்குகளைப் பயன்படுத்துதல் குற்றமா ?

(இ) ஆமெனில், 1973 ஆம் ஆண்டு, ஜூன், ஜூலை மாதங்க்ளில் சென்னை நகரில், காவல் துறையினரால் இது சம்பந்தமாக குற்றப்பத்திரிகை தயாரிக்கப்பட்ட நேர்வுகள் எத்தனை ?